

# பனிமயம்

ஏப்ரல் 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்புமக்களே, நலந்தானா?

மார்ச் மாதம் 05ஆம் தேதி சாம்பல் புதனோடு தவக்காலத்தைத் தொடங்கினோம். ஏப்ரல் மாதம் 20ஆம் தேதி இயேசுவின் உயிர்ப்போடு தவக்காலத்தை நிறைவு செய்கிறோம்.

கடந்த மாதத்திலிருந்து ஆண்டவர் இயேசுவின் பாடுகளைத் தியானிக்கின்ற விதத்திலும் அவருடைய பாடுகளில் பங்கெடுக்கின்ற விதத்திலும் அநேக தவமுயற்சிகளையும், செயல்களையும் மேற்கொண்டு வருகின்றோம். தவக்காலம் முழுவதும் தினமும் ஏதாவது ஒரு திருப்பலியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். திருவிவிலியத்தை வாசிக்கின்றோம், சிலுவைப்பாதைகளில் பங்கெடுக்கிறோம், திருப்பயணங்கள் மேற்கொள்கின்றோம், திவ்ய நற்கருணையை சந்திக்கின்றோம், புலால் உணவுகளை தவிர்த்திருக்கின்றோம், உணவுகளை ஒறுத்திருக்கிறோம், ஊடக நோன்பை கடைபிடிக்கின்றோம். தியானங்களிலும் நற்செய்தி பெருவிழாக்களிலும் பங்கெடுக்கின்றோம். இவை அனைத்துமே ஆண்டவரை மகிமைப்படுத்த, நம் ஆத்துமங்களை காத்துக்கொள்ள என்பது உண்மையானாலும் “தவக்காலம் அயலாரோடு கொண்டுள்ள உறவை சீர்ப்படுத்தவும்” தரப்பட்ட காலம் என்பதை மறக்கவேண்டாம்.

ஆண்டவரை நேசிப்பது எளிது. அயலாரை நேசிப்பதுதான் கடினம். ஆண்டவரோடு கொண்டிருக்க வேண்டிய உறவை சீர்ப்படுத்தி விடுகிறோம். அயலாரோடு கொண்டிருக்க வேண்டிய உறவை சீர்ப்படுத்தாமலே கடந்து சென்று விடுகிறோம். ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாயலாகவே படைக்கப் பட்டிருக்கிறான் (தொநூ 1:26) என்பதை மறக்கக் கூடாது. “ஒவ்வொரு மனிதனும் என் நண்பன், ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன்” என்கிற ஆலயப் பாடலின் வரிகளை உண்மையாக்குவோம்.

“மன்னிப்போம், மறப்போம்” என்று சொல்வார்கள். நாம் மன்னிப்பதுமில்லை மறப்பதுமில்லை. அப்படியே மன்னித்தாலும் மறப்பதில்லை. நம் உள்ளங்களில் வருடக்கணக்காய் சில பகைமை உணர்வுகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். கல்லறையில் அடக்கப்படும் இயேசுவோடு நம் பகைமை/ வெறுப்பு உணர்வுகளையும் அடக்கம் செய்வோம்.

இயேசு மகிமையாய், வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்தார். பாவத்தையும் சாவையும் அவர் வென்று உயிர்த்ததுபோல பகைமையையும் தீய எண்ணங்களையும், தீய செயல்களையும் வென்று நாமும் புதிய மனிதர்களாய் உயிர்த்தெழுவோம்.

அனைவருக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களையும், ஆசிகளையும் அன்போடு உரித்தாக்கிக் கொள்கிறேன்.

God Bless You All.

அன்பும், ஆசீரும்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை



# உள்ளே...


1. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 4
   அருள்பணி. குமார்ராஜா
2. மன்னிப்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 6
   கலாபன் வாஸ்
3. தொடரட்டும் தவக்காலம்
   - ஒளிரட்டும் உயிர்ப்பில் புதுவாழ்வு . . . . . . . . . 8
   ஜோ. ரெஜினா கிரகோரி
4. இன்றே என்னோடு ..... . . . . . . . . . . . . . . . . . . . 10
   முனைவர் சி. ஜாக்சன்
5. உயிர்ப்பில் புதுப்பிறப்பு . . . . . . . . . . . . . . . . . 12
   ரோஸ் சேவியர்
6. உதவிக்கரம் நீட்டுவதற்கு தகுந்த காலம் . . . . . . 14
   அண்டோ மோத்தா
7. ஒளிரட்டும் வாழ்வு . . . . . . . . . . . . . . . . . . . . 16
   ம. பனிமயசுகந்தி
8. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . 17
9. விவிலியப்போட்டி. . . . . . . . . . . . . . . . . . . . . 18
10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 21
11. புனித வாரத் திருநிகழ்வுகள் - 2025 . . . . . . . . . 24



உதயம் 26 தாரகை 8

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருள்பணி. ஸ்டார்வின்
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்


**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |


வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுக்காக

புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு மனித உறவுகளை மாற்றாது, மனிதர்களின் மாண்பை மதிக்கவும், நமது காலத்தின் நெருக்கடிகளை எதிர்கொள்ள உதவவும் நாம் மன்றாடுவோம்.

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 21 மாட்சிக்குரிய பாத்திரம்!



லொரெட்டோ மன்றாட்டு மாலையில்; அன்னை மரியாவின் சிறப்புப் பெயர்களில் "பாத்திரமே" என்பது மூன்று முறை சொல்லப்படுகிறது. ஞானம் நிறைந்த பாத்திரம், மாட்சிக்குரிய பாத்திரம், பக்தி நிறைந்த பாத்திரம் என்பவையே அவை. பாத்திரம் என்பதை ஒரு மனிதருக்கு எப்படிப் பெயராக்கலாம் என்னும் கேள்வி நம் மனதில் எழலாம். ஆனால், கதையில், நாடகத்தில் வரும் நபர்களைக் கதா பாத்திரம் என்று சொல்கிறோமல்லவா? அதுபோல, மீட்பின் வரலாற்றில் முக்கிய பாத்திரமாகத் திகழ்வதால் மரியாவைப் பாத்திரம் என்று அழைப்பது சரியே. மேலும், மரியா இயேசுவைத் தம் வயிற்றில் தாங்கியவர் என்பதால் அவ்வகையிலும் அது பொருத்தமான பெயரே.

மரியா "மாட்சிக்குரிய பாத்திரம்" (Vessel of Honour) என்பதன் சிறப்பு என்ன? இப்பெயர் மரியாவின் கன்னிமை, தூய்மை ஆகியவற்றைக் குறிக்கிறது.

"ஒரே களிமண்ணைப் பிசைந்து மதிப்புள்ள கலனையோ மதிப்பற்ற கலனையோ வனையக் குயவனுக்கு உரிமை இல்லையா?" (உரோ 9:21) என்று கேட்கிறார் பவுலடியார். மனிதர்களாகிய நாம் அனைவருமே கடவுள் என்னும் குயவன் வனைந்த பாத்திரங்கள்தான். ஆனால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலும் கடவுளால் பயன்படுத்தப்படுகிறோம். தம் ஒரே மகனைத் தம் திருவயிற்றில் தாங்குவதற்காகக் கடவுள் தேர்ந்தெடுத்த சிறப்பான பாத்திரமே அன்னை மரியா. எனவேதான், அவரை மாட்சிக்குரிய பாத்திரம் என்று அழைக்கிறோம்.

கலன்களைப் பற்றிப் பேசும் பவுலடியார் இன்னொரு கருத்தையும் குறிப்பிடுகிறார். "அவரது இரக்கத்திற்கு உரித்தான கலன்கள் **மாட்சி பெறவேண்டும்** என்று முன்னேற்பாடு செய்திருந்தார். அக்கலன்களைப் பொறுத்தவரை அவர் தமது அளவற்ற **மாட்சியை** வெளிப்படுத்த விரும்பினார்" (உரோ 9:23) என்கிறார். 'மாட்சி' என்னும் சொல்லை அவர் இருமுறை பயன்படுத்துவது குறிப்பிடத்தக்கது. கடவுளுக்கு உகந்த இறையடியார்களுள் சிலரை அவர் உயர்த்திப் பெருமைப்படுத்துகிறார் என்பதை விவிலியம் முழுவதும் நாம் பார்க்கிறோம். ஆபிரகாம், மோசே, தாவீது என்று தொடங்கி, ஆண்டவர் இயேசு வரையில் பலரையும் கடவுள் மாட்சிப்படுத்தியுள்ளார். அவரது திருவுளத்துக்குத் தம்மை முற்றிலும் கையளித்த அன்னை மரியாவையும் அவர் பிறப்புநிலைப் பாவம் இன்றிப் பிறந்தவராக, உடல் அழியாதவராக, உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டவராக மரியா கடவுளால் மாட்சிப்படுத்தப்பட்டுள்ளார்.

புதிய உடன்படிக்கையின் பேழை என்றும் மரியா அழைக்கப்படுவதை நாம் அறிவோம். அதற்கு இணையான மாற்றுப் பெயரே மாட்சிக்குரிய பாத்திரம். ★

# 22 பக்தி நிறைந்த பாத்திரம்!



லொரெட்டோ மன்றாட்டு மாலை அன்னை மரியாவைப் பாத்திரம் என்று மூன்று முறை அழைக்கிறது. அப்பெயர்களுள் ஒன்றுதான் “பக்தி நிறைந்த பாத்திரம்” (Singular Vessel of Devotion). இறைமகனாம் இயேசுவைத் தம் திருவயிற்றில் தாங்கியதால், மரியா பாத்திரம் என்று அழைக்கப்படுகிறார். “வெள்ளியினின்று மாசை நீக்கிவிடு. அப்போது தட்டார் அதிலிருந்து அழகிய பொருள் ஒன்றை உருவாக்குவார்” (நீமொ 25:4) என்னும் இறைமொழிக்கேற்ப, கடவுளால் கவனத்தோடு வனையப்பட்ட பாத்திரமே மரியா. மாசு நீக்கப்பட்ட பாத்திரம் போல, மரியாவும் பிறப்பிலேயே பாவ மாசின்றி பிறக்கும் பேற்றினைப் பெற்றார்.

பக்தி என்னும் சொல் இறைப்பற்றைக் குறிக்கிறது. விவிலியத்தில் ஒரு சிலரே நேர்மையாளர்கள் என்றும், இறைப் பற்று கொண்டவர்கள் என்றும் அழைக்கப் படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, இயேசுவின் பிறப்பின்போது எருசலேமில் அவரைச் சந்தித்த இறைவாக்கினர் சிமியோனைப் பற்றி லூக்கா “அவர் நேர்மையானவர்; **இறைப்பற்றுக் கொண்டவர்**; இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர்; தூய ஆவியை அவர் பெற்றிருந்தார்” (லூக் 2:25) என்று எழுதியுள்ளார்

சிமியோனைப் போலவே அன்னை மரியாவும் நேர்மையாளராகவும், இறைப் பற்று மிக்கவராகவும், மெசியாவை எதிர்நோக்கியவராகவும், தூய ஆவியால் நிரம்பியவராகவும் இருந்தார். எனவே, அவர் பக்தி நிறைந்த பாத்திரம் என்னும் பெயருக்குப் பொருத்தமானவரே.

இந்தப் பெயருக்கான இன்னொரு விளக்கத்தையும் விவிலியம் நமக்குத் தருகிறது. பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒரு மனிதரை இயேசு நலப்படுத்தி அவருக்குப் பார்வை அளித்த நிகழ்வு யோவான் நற்செய்தியில் தரப்பட்டுள்ளது. நலம் பெற்ற மனிதரோடு வாக்குவாதம் செய்த பரிசேயர்கள் இயேசு அவரை எப்படி நலப்படுத்தினார் என்று வினவினர். இயேசுவைப் “பாவி” என்றும் அழைத்தனர். அப்போது அம்மனிதர் “பாவிகளுக்குக் கடவுள் செவிசாய்ப்பதில்லை; இறைப்பற்றுடையவராய்க் கடவுளின் திருவுளப்படி நடப்பவருக்கே அவர் செவி சாய்க்கிறார் என்பது நமக்குத் தெரியும்” (யோவா 9:31) என்று துணிவுடனும், அறிவாற்றலுடனும் பதிலுரைக்கிறார்.

அன்னை மரியா இறைப்பற்று உடையவராய்க் கடவுளின் திருவுளப்படி நடந்தவராக இருந்தார். எனவேதான், கடவுள் அவருக்கு செவிசாய்த்தார். இன்றும் அவரது பரிந்துரைக்குக் கடவுள் செவி சாய்த்து எண்ணற்ற அற்புதங்களை, அருளடையாளங்களை நிகழ்த்துகிறார்.

மரியன்னையைப் பல பெயர்களைச் சொல்லி வாழ்த்தும் அன்புப் பிள்ளைகள் அனைவரும் அவரைப் போலவே இறைப்பற்று உடையவர்களாகவும், கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் களாகவும் வாழ்வதே அந்த அன்னை நம்மிடம் எதிர்பார்ப்பது.



அருள்பணி. குமார்ராஜா

# மன்னிப்பு

## இறைவன் தம்முடைய இதயத்தோடு இணைய அழைப்பு விடுக்கின்றார்!



எப்பேர்ப்பட்ட பாவியாக இருந்தாலும், தம்மை நாடி வருபவர்களை மன்னிக்கும் இயேசுவைப் பற்றிய நிகழ்ச்சிகளை ‘நற்செய்தி’யில் பார்க்கிறோம்.

அவருடைய இரக்கத்தையறிந்த பெரும் பாவியான ஒரு பெண்மணி, எல்லா பாரம்பரியங்களையும் புறந்தள்ளிவிட்டு, இயேசுவின் பாதங்களைத் தொட்டு, முத்தி செய்து, விலையுயர்ந்த பரிமளத் தைலத்தினால் பூசினாள் (லூக்கா 7:36-50).

**சக்கேயு** என்ற வரி தண்டுபவர், தான் சம்பாதித்த திருடிய எல்லாச் சொத்துகளையும் மனமுவந்து ஒப்படைக்கிறார், இயேசுவின் இணக்கமான அன்பை அறிந்திருந்ததால் (லூக் 19:1-10).

இயேசு விவரித்த, காணாமற்போன மகன் உவமை (லூக் 15:11-32); பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமை (லூக் 18:9-14 வழியாக, மன்னிக்கக் காத்திருக்கும் இயேசுவை அறிகிறோம்.

### மன்னிக்க முடியுமா?

இயேசுவின் தோழமை உறவில் உள்ளவர்களாகிய சீடத்துவர்களாகிய நாம், இயேசுவைப் போன்று, மன்னிக்கும் மனப்பக்குவத்தோடு இருக்கிறோமா?.... நாம் வாழும் குடும்பம் - சமூகம் - விரோதம், பொறாமை, எதிர்வினை நிறைந்ததாயுள்ளது.... இத்தகைய சூழலில் நமக்கு மன்னிக்க முடியுமா? எங்கு திரும்பினாலும் பிரிந்து வாழும் குடும்பங்கள்.... கணவனால் மனைவியை மன்னிக்க முடியவில்லை.

மனைவியினால் கணவனை மன்னிக்க முடியவில்லை. அற்பக் காரணங்களால் சிதறுண்டு கிடக்கும் குடும்பங்கள்.... பிரிந்த குடும்பம் இணைந்து வருவதற்குக் குறுக்கே நிற்பது 'ஈகோ' என்ற 'தான்'!

(EGO = **E**DGING **G**OD **O**UT)

பழிவாங்கும் வெறுப்பு மனநிலையை சர்வ சாதாரணமாக ஏற்றுக்கொள்ளத் துவங்கி விட்டோம். குரோத மனப்பான்மை நமக்குள் குடியேறிவிட்டது. வன்முறை என்ற புதிய கலாச்சாரம் மலிவாகிவிட்டது..... இத்தகைய சூழலில், இயேசுவின் மன்னிக்கும் பெருந்தன்மையை நாம் சுவைத்துப் பார்க்க அழைக்கப்படுகிறோம்..... அதுதான் நற்செய்தியின் உறுதிமொழி.... பெரும் பாவியான பெண் போன்று, சக்கேயு போன்று இயேசுவின் முன் வந்து நிற்போம்.... அவர் நமக்கு என்ன சொல்கிறார் என்பதையும் கேட்போம்... "நான் உமக்குச் சொல்கிறேன். இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப் பட்டன" (லூக் 7:47).

**'நான் உன்னை மன்னிக்கிறேன்'**

எவ்வளவு சக்தி வாய்ந்த சொற்கள்!

குத்திக் குதறிய இதயத்திலிருந்து வெளிப்படும் அமுத மொழிகள் அல்லவா!

"ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்து கொள்பவரல்லர் என்றென்றும் சினங்கொள்பவரல்லர். அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை" (திபா 103:8-10).

மன்னிப்பது எளிய செயலல்ல! மன்னிக்கத் தெரிந்தவர் மாமனிதர். மன்னிக்காமல் போனதினால் எத்தனையோ அவலங்கள் நிகழ்ந்துள்ளன... இன்னுயிர்கள் மாய்ந்துள்ளன.... உறவுகள் முறிந்துள்ளன.... குடும்பங்கள் சிதைந்துள்ளன... பல நாடுகளும் நாசமாகின என்பதைத் திருவிவிலியத்தில், அப்சலோம் ஆம்னோன் வரலாறு (2சாமுவேல்) யோசேப்பும் அவனுடைய சகோதரர்களும் (தொடக்கநூல் 37).... காண்கிறோம்.

இயேசுவின் பணிவாழ்வு முழுவதும் மன்னிப்பின் மகத்துவத்தையும் தேவையையும் முன்னிறுத்துகின்றார் என்பதை, மத்தேயு 6:14-15 - 18:21-35 / யோவான் 8:1-11-ல் காணலாம்....

இரக்கமும், மன்னிக்கும் பண்பும் மனித மனத்துள் எத்தகைய இடத்தைப் பெற்றுள்ளது?

பழிவாங்குதல், எதிர்ப்பு, குரோதம் போன்ற மனித மனப்பான்மைக்கு மாற்றாக, மன்னிக்கும் மனப்பான்மையைத் தருவது, 'அன்பு எனும் பண்பு'! இந்த இறையன்பு அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கத் தயாராயிருக்கிறது என்கிறார் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் (உலக சமாதான நாள் உரை - 1997).

கடவுளின் அன்பை நாம் அறிந்திருக்கிறோமா? நம் இதயக் குடிலில் வாசம் செய்யும் இறைவனை எந்த அளவுக்கு அறிந்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு தூய ஆவியானவர் நமக்கு உறுதுணையாயிருந்து, இறையன்பைச் சுவைக்கச் செய்வார். மன்னிக்கும் மனப்பக்குவத்தை அருள்வார்.

துன்புறும் வேளையிலும் - சிலுவையில் அறையுண்டு வேதனைப்படும்போதும்கூட, அருகிலிருந்த சிலுவையில் தொங்கியவன் மன்னிப்பு வேண்டியபோது, மனமுவந்து மன்னித்தாரே மனுமகன் அதற்குப் பெயர்தான் மன்னிக்கும் இறையன்பு!



**கலாபன் வாஸ்**

# தொடரட்டும் தவக்காலம் – ஒளிரட்டும் உயிர்ப்பில் புதுவாழ்வு



கல்லறை திறந்துவிட்டது. காரிருள் மறைந்துவிட்டது. வல்லவன் இயேசு உயிர்த்து விட்டார். இயேசுவின் திருப்பாடுகளைத் தியானித்த நாம் அவரது உயிர்ப்பில் மகிழும் காலம் மட்டுமல்லாது, இயேசுவின் உயிர்ப்பில் புது வாழ்வையும் பெறும் நேரமிது.

பொன்னை நெருப்பிலிட்டுப் புடம் போடுவதுபோல் நாற்பது நாட்கள் தவக்காலம் என்ற வசந்தகாலம் நம்மைத் தூய்மைப்படுத்தி விட்டது. எத்தனை செப, தவ முயற்சிகள், தர்மங்கள், ஒறுத்தல்கள், ஒரு சந்தி, சுத்த போசனம், திருப்பலியில் பங்கேற்பு போன்ற நன்னெறிச் செயல்கள் நம்மைப் பாவம் செய்ய விடாமல் தடுத்தன. திருப்பயணங்கள் இயேசுவின் வாழ்க்கைப் பயணத்தோடு இணைந்திருந்தன.

சிலுவைப் பாதைகளில், நம்மைத் தீர்ப்பிடுதலிலிருந்து மீட்க வேண்டினோம். துன்பங்களைச் சுமக்கப் பொறுமையை வேண்டினோம். நம் பாவங்களை விட்டு விலக வேண்டினோம். அன்னை மரியா உடனிருப்பை வேண்டினோம். நமக்காகவும், நம் மக்களுக்காகவும் அழுது வேண்டினோம். இவ்வுலகச் செல்வங்களை வெறுத்து விண்ணகத்தை மட்டும் விரும்ப இரக்கத்தை வேண்டினோம்.



பக்தி முயற்சிகள், இறை வழிபாடுகளில் மட்டுமின்றி, நம் வாழ்க்கையிலும் எத்தனையோ மாற்றங்களை உரிமையாக்கினோம்.

குடியும் கும்மாளமுமாக இருந்தவர்கள் மதுக்கடைகளை மறந்து குடித்தனமும், குதூகலமுமாய், குடும்பத்தினருடன் மகிழ்ந்திருந்தோம். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தள்ளி வைத்தோம். ஆபாசப் படங்கள், ஆடல்கள், பாடல்களை ஒதுக்கி வைத்தோம். ஏழை எளியவர்க்கு உண்ண உணவும், குடிக்கப் பானமும் அள்ளி அள்ளி வழங்கினோம். நமது தியாகத்தால் சேர்த்து வைத்த செல்வத்தை வறியவரின் துன்பம் துடைக்க வழங்கினோம்.

அந்த நாற்பது நாட்கள் முடிந்து இறைமகன் உயிர்த்தெழுந்த மகிழ்வின் காலம் வந்ததும் நாம் பின்னோக்கிச் செல்வதேன்? ‘பாஸ்கா’ விழாவின் உண்மையான அர்த்தத்துடன் பாவ வாழ்க்கையைக் ‘கடந்து’ வந்து புதுப்பிறப்பாக மாறிய நாம் ஏன் மீண்டும் பாவச் சேற்றில் விழ வேண்டும்? நம் பக்தி முயற்சிகளும், ஒறுத்தல்களும் நாற்பது நாட்களில் முடிந்து விடுகின்ற வாழ்வா நமது கிறிஸ்தவ வாழ்வு!

மதுக்கடைகளுக்கு மீண்டும் கால்கள் முன்னேறிச் செல்வதேன்? நாற்பது நாட்கள் மகிழ்ந்திருந்த குடும்பத்தை வேதனைப் படுத்தவா? மீண்டும் தொலைக்காட்சியில் நுழைகின்றோமே, நம் உள்ளங்களைக் களங்கப்படுத்தவா? நாற்பது நாட்கள் அந்த ஏழை பட்டினி கிடக்க வேண்டுமா?

புண்ணிய நெறிகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது நமது கடமையல்லவா? ஏன் புதிய மனிதனாக நாம் மாறக் கூடாது? திருப்பலியின் பங்கேற்பு, விவிலிய வார்த்தைகளை வாசித்து அதன்படி வாழ்தல் மற்றும் நாம் கடைப்பிடித்த நன்மைகளைத் தொடர்வோம். ஒரு வேளை உணவை உண்ணாமல் நோன்பிருப்பது நம் உடலுக்கும், உள்ளத்துக்கும் நலம் பயக்கும். அதனைத் தொடர்வதும் தவறில்லை.

தீமைகளை மனதிலிருந்து தூக்கி எறிவோம். பாவ வாழ்வை ஒழித்து இறை உறவை வலுப்படுத்துவோம். இறைமகனின் சிலுவை வாழ்வில் கிடைத்த ‘மாற்றம்’ அவரது உயிர்ப்பில் மாறிவிடக் கூடாது. ‘மாற்றம் ஒன்றே மாறாதது’’ என்பது நாமறிந்த உண்மை. தடுமாற்றத்தைத் தவிர்ப்போம். கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் புதுவாழ்வினை வாழப் புதுப்பிறப்புகளாக மாறி நிலையான மாற்றம் பெறுவோம்.

வாழ்வது ஒருமுறை, வாழ்த்தட்டும் தலைமுறை என வாழ்ந்து காட்டுவோம். எப்படியும் வாழ்வோம் என்றில்லாமல், இப்படித்தான் வாழ்வோம் என வரையறை வகுப்போம்.

‘Nobleness Enkindles Nobleness’ என்பதற்கேற்ப நமது மாற்றத்தைக் கண்டு நம்மைச் சுற்றியுள்ளவர்களும் மாற்றம் பெறுவர். மண்ணில் மறுமலர்ச்சி மலர்ந்து இறையாட்சியின் மதிப்பீடுகள் வளர்ந்து புது உலகம் உருவாகும் என்பது உண்மையிலும் உண்மை.

கிறிஸ்துவின் உயிர்ப்பில் புதிதாகப் பிறப்போம். புது வாழ்வினைத் தொடர்வோம்!



**ஜோ. ரெஜினா கிரகோரி**



# இன்றே என்னோடு .....

தவக்காலம்... ஆலயத்தில் ஒலிப்பெருக்கி ஒலித்தது. கூட்டமாக சிலுவைப்பாதை செய்தார்கள் மக்கள். மரங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டன. இந்த மனிதர்கள் நம்மை வெட்டி எத்தனையோ சிலுவைகளை உருவாக்கி விட்டார்கள். ஆனால் இந்த மனிதர்களால் ஓர் இயேசுவைக் கூட இன்னும் உருவாக்க முடியவில்லையே... என்று!

உண்மைதான். ஒவ்வொரு தவக்காலத்திலும் தத்ரூபமாக இயேசுவின் பாடுகளை கண்முன்னே மாதிரிகள் உருவாக்கி வைத்து விதவிதமாக சிலுவைப் பாதைகள் நடத்தப்படுகின்றன.

நமது பரிசுத்த பனிமய அன்னைத் திருத்தலப் பேராலயத்தில் பெரிய சிலுவை பாதைகளில் நம் கண்முன்னே கொடுஞ்சிலுவை மரம். நம் முன்னே காணும் இயேசுவின் வலி மிகுந்த முகம் நம் கண்களைக் குளமாக்குகின்றன. பாடுகள் நம் நெஞ்சை உருக வைக்கின்றன. ஆனால் ஆண்டுதோறும் வரும் தவக்காலம் நமக்கு வாடிக்கையாகிவிட்டதோ? சிலுவைப் பாதை, புனித வார நிகழ்வுகள் நமக்கு வேடிக்கையாகிவிட்டனவோ? ஏனென்றால் சண்டை போடுகிறவர்கள் போட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். அவதூறு பேசுகிறவர்கள் பேசிக்கொண்டுதான் உள்ளனர். பெயரைக் கெடுக்கிறவர்கள் கெடுத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். உடன் பிறந்தாருக்கு இடையே தகராறு நடந்துகொண்டுதான் இருக்கிறது. பகைமை தொடர்கதையாக உள்ளது. மனத்தாங்கலோடு உள்ளவர்கள் உள்ளக் குமுறலோடு இருந்து வருகிறார்கள் .

ஹிட்லரின் கொடுங்கோலாட்சியின்போது ஒரு முகாமில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளுள் இரு முதியவர்களையும் ஒரு குழந்தையையும் தூக்கிலிடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நாளில் அந்த தூக்குத்தண்டனையைப் பார்க்க அனைத்துக் கைதிகளும் கூடியிருக்க அம் மூவரும் தூக்கிலிடப்பட்டனர். உடலின் கனத்தால் முதியவர்கள் இருவரும் உடனே இறந்து விட்டனர். ஆனால் அக்குழந்தை

மட்டும் நீண்ட நேரம் துடித்து உயிருக்கு போராடி அணுஅணுவாக இறந்தது. இதைப்பார்த்து கொண்டிருந்த அனைவரும் துடிதுடித்துப் போயினர். ஒருவர் தன் அருகில் இருப்பவரைப் பார்த்து 'இச்சின்னஞ்சிறு குழந்தைக்கு இத்தனைக் கொடூரமா? இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் இறைவன் எங்கே? எதற்காக இறைவன்? என்றெல்லாம் கேட்டார். அருகில் இருந்தவர் அவரைப் பார்த்து "அதோ அந்தக் குழந்தையில் இறைவன் துடித்துக் கொண்டு துன்பத்தை அனுபவிக்கிறார்" என்றார்.

எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கும் இறைவன், மனிதர்களை தமது சாயலாக படைத்த இறைவன் , அவர்கள் உடனிருந்து துன்பத்தையும் அனுபவிக்கிறார் என்பது மிகப்பெரிய மறைபொருளாக தோன்றுகிறது.

இந்த வலிகளில் இருந்து இறைவனை விடுவிப்பது எது? சிலுவை பாதையில் இயேசுவுக்கு மிகுந்த ஆறுதலை தந்தவர் யார்? இரு கேள்விகளுக்கும் விடையாக எனது மனதில் தெரிந்தவர் நல்ல கள்வன். தனது பாவ வாழ்க்கையின் பயனாக சிலுவை மரணத்தைப் பெற்றவர். சிலுவையில் ஆறு மணிநேரம் இயேசுவோடு அருகில் இருந்தவர் .இவர் கதை விவிலியத்தில் மிகச் சிறியதாகப் பேசப்படுகிறது.

லூக்கா தனது நற்செய்தியில் ஐந்து வசனங்களில் சொல்லப்பட்ட இவர் ஆயுளுக்கும் தேவையான ஞானத்தை நமக்கு போதிக்கும் போதிமரம். உண்மையான உயிர்ப்பின் மாதிரி இவர். 'நீ மெசியா அல்லவா! உன்னையும் எங்களையும் காப்பாற்று' என்று ஒரு கள்வன் இயேசுவைப் பழிக்கின்ற பொழுது அதற்குப் பதிலாக மனம் மாறிய நல்ல கள்வன் "கடவுள் மட்டில் உனக்கு அச்சமே இல்லையா?" என்கின்ற பொழுதுதான் நாம் அவரை பார்க்கின்றோம்.

கடவுளுக்குப் பயப்படுவதே ஞானத்தின் முதல்படி. கடவுளுக்குப் பயப்படவேண்டும் என்ற ஞானத்தின் முதல்படியில் கால் வைக்கின்றார். பகைவர்களுக்காக மனமிரங்கி வான் தந்தையிடம் மன்றாடிய இவர் குற்றமற்றவர் இறை மைந்தர் என அவரது அகமனம் சொல்லியிருக்க வேண்டும். அதனால்தான் நீர் ஆட்சியுரிமை பெற்று வருகையில் என்னை நினைவில் வையும் என கேட்கின்றான். இயேசு அற்புதங்கள் செய்யும்போது இதை அவரிடம் கேட்டிருந்தால் கூட பரவாயில்லை. மரணத்தின் விளிம்பில் இயேசு இருக்கையில் அவரிடம் விண்ணப்பம் வைக்கின்றார். இயேசுவின் மீது அவரையும் அறியாமல் ஏற்பட்ட பக்தி எனும் கண்கொண்டு தொலைநோக்குப் பார்வையாலேயே சிலுவையில் இறக்கின்ற தருவாயில் இருக்கும் இயேசுவைச் சரியாக மதிப்பீடு செய்கின்றார். விளைவு வீடுபேற்றை அருளும் பரிசாக 'இன்றே என்னுடன் வான்வீட்டிலிருப்பாய்' என்கின்றார் இயேசு. இன்றே என்னோடு என்று இயேசு சொன்ன அந்த வார்த்தையை விடவா உலகில் மகிழ்ச்சி தரும் வார்த்தைகள் தேவை? என எண்ணத் தோன்றுகிறது .

இறைவன் மீது வைத்த நம்பிக்கையால். ஒவ்வொரு வினையும் நல்விளைவை கொண்டதாகிறது. ஒவ்வொரு வருந்துதலும் மீட்புக்குக் கதவு திறக்கிறது. மனமாற்றம் உயிர்ப்பைத் தருகிறது... நல்ல கள்வனைப் போல உண்மையான மனமாற்றம், இயேசுவோடு கல்வாரி உடனிருப்பு அனுபவம் பெறுவோம் . உண்மையான இறை அச்சத்தோடு கூடிய பக்தியால் உயிர்ப்போம். அனைவர்க்கும் உயிர்ப்பின் வாழ்த்துக்கள் .



முனைவர் சி. ஜாக்சன்



# உயிர்ப்பில் புதுப்பிறப்பு

உயிர்ப்பு என்பது மரணத்திற்கு பின்பு உயிர் பெற்று எழுவது. இயேசுவின் வல்லமை நிறைந்த சரித்திரம். உயிர்ப்பு என்பது கொண்டாட்டமல்ல; அனுபவம்.

கிறிஸ்துவத்தின் அழைப்பு என்பது இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவத்தில் பங்கு கொள்வதே. இயேசுவின் பாடுகளின்போது திசைக்கொருவராக சிதறிய சீடர்களின் பயத்தை நீக்கி, வீறு கொண்டு இயேசுவின் பணிகளைச் செய்யும் அர்ப்பண உணர்வையும் மனதைரியத்தையும், இறப்பின் பின் உயிரத்தெழுவோம் என்ற எதிர்நோக்கையும் தூய ஆவியாரின் துணையையும் பெறச் செய்தது. இகழ்ச்சிக்குரிய சிலுவை உயிர்ப்புக்குப் பின் மாட்சிப் பெற்றது.

ஒளி, இறைவனின் வெளிப்பாடு. தொடக்கத்தில் கடவுள் “ஒளி தோன்றுக” என்றார் உலகம் ஒளிமயமானது. “அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி இயேசு இவ்வுலகிற்கு வந்தார்” (யோவா 1:9).

இயேசுவின் ஒளி நிறைந்த பார்வை, இயேசுவை காண வந்த சக்கேயு என்ற மனிதனின் உள்ளத்தில் உள்ள பாவஇருளை வார்த்தையினால் வெளிவரச் செய்தது. (லூக் 19:8).

“உலகின் ஒளி நானே, என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார். வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்” என்றார் இயேசு (யோவா 8:12).

இயேசுவின் ஒளி கிறிஸ்தவர்களை துன்புறுத்திய சவுலை புனித பவுலாக மாற்றியது (திப 9:2) இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்பாத கிரேக்கர்கள், கொரிந்து நகர மக்களுக்கு இறந்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய உண்மையை, தமஸ்கு நகரில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி புனித பவுல் விளக்குகிறார் (1கொரி 15:50-52).

இயேசுவின் ஒளி ஏழு அசுத்த ஆவிகளைக் கொண்ட பெண் மகதலேனா மரியாவை “இயேசுவின் உயிர்ப்பின் நற்செய்தியை அறிவிக்கும் முதல் பெண்ணாக மாற்றியது (யோவா 20:11-18) ‘மோசே கடவுளோடு பேசியதால் அவர் முகத்தோற்றம் ஒளிமயமாக இருந்தது’ (விப 34:29).

தாவீது, “உமது முகத்தின் ஒளி அடியேன் மீது வீசும்படி செய்யும்” (தி.பா.31:16) என்று பாடுகிறார்.

“தூங்குகின்றவனே, விழித்தெழு. இறந்தவனே, உயிர்பெற்றெழு; கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்” (எபே 5:14).

இயேசு பிறந்த பிறகு குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க எருசலேம் ஆலயத்திற்கு சென்றபோது, சிமியோன் குழந்தையை கையில் ஏந்தி, “இம்மீட்பே பிற

இனத்தார்க்கு அருளும் ஒளி" (லூக். 2:32) என்று இறைவாக்குரைக்கிறார். அன்னை மரியா, வானவர் தூதுரைத்த நாள் முதல் தன் மேல் நிழலிட்ட தூய ஆவியாரின் கொடைக்காக வேண்டிக்கொண்டிருந்தார். இறுதியாக பாவ கறையின்றி அனைத்துலக அரசியாக உடலோடும் ஆன்மாவோடும் கடவுளால் உயர்த்தப் பெற்றார். ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவராகவும், சாவின் மீது வெற்றி கண்டவருமாகிய தன் மகனுக்கு இன்னும் அதிக நிறைவை தருபவராக உயர்த்தப்பெற்றார். (சங்க ஏடு 59)

"கடவுள் ஒளியாய் இருக்கிறார்" (1யோவா 1:5).

விஜய நகர் அரசர் ஒரு போட்டி அறிவித்தார். கடுங்குளிரில் குளிர்ந்த தண்ணீர் உள்ள குளத்தில் இரவு முழுவதும் நிற்க வேண்டும். போட்டியில் வெற்றி பெற்றால் பொற்காசு பரிசாக கொடுக்கப்படும் என்பதே அந்தப் போட்டி. நகரில் ஒருவருமே பங்கெடுக்கவில்லை. மறுநாள் ஒரு வயது முதிர்ந்த பெரியவர் தான் போட்டியில் பங்கெடுத்து பரிசு பெறப் போவதாகக் கூறுகிறார். அன்றே குளத்தில் இறங்குகிறபோது, அரசரவையில் உள்ள கடவுள் நம்பிக்கையாளர் ஒருவர் பெரியவரிடம், "குளத்திலிருந்து தொலைவில் ஒரு குன்றில் உள்ள தீப ஒளியை பார்த்துக் கொண்டே கடவுள் நாமத்தை சொல்லுங்கள்" என்று கூறுகிறார். அவரும் சம்மதித்து குளிர்தண்ணீரில் இறங்கி, மறுநாள் காலை வெளியே வருகிறார். "உங்களுக்கு குளிராக இல்லையா?" என்று கேட்டதற்கு, ஒளியைப் பார்த்துக் கொண்டே, கடவுளின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருக்கும்போது சிறிது சிறிதாக தீபத்தின் வெப்பம் என் உடலுக்கு வெதுவெதுப்பைக் கொடுத்தது போல உணர்ந்தேன் என்றாராம். அவர் பரிசு பெற்று தன் மகளின் திருமணத்தை சிறப்பாக நடத்தினார்.

இறைவனின் ஒளி நம் உள்ளத்தில் உள்ள பாவ இருளை அகற்றி, நம்மைச் சுற்றி உள்ள துன்ப, துயரங்களையும் தீய சக்தியையும் நீக்கி, நிறைவான வாழ்வுக்கு இட்டுச் செல்கிறது. உயிர்த்த ஞாயிறு திருவிழிப்பு சடங்கில் திரு ஒளியும், திருமுழுக்கு அருள்சாதனமும் நினைவூட்டப்படுகிறது.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் உயிர்த்தெழுவர் என்பது உறுதி. மீட்பு வரலாற்றின் சிகரமான உயிர்த்தெழுதலில் நாம் பங்கு பெற, இவ்வுலகில் அறச்செயல்களில் ஈடுபட்டு, நம் வாழ்வை இயேசுவின் முக ஒளியால் ஒளிரச் செய்வோம்!



ரோஸ் சேவியர்



# உதவிக்கரம் நீட்டுவதற்கு தகுந்த காலம்

“ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார். அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்து விடுவார்” (நீதிமொழிகள் 19:17).

நமது பாதுகாவலியாம் அன்னை மரியா தேவையில் இருப்போரை தேடிச் சென்று அவர்களுக்கு உதவி செய்ததாக நாம் விவிலி யத்தில் பார்த்திருக்கிறோம். இறைமகன் இயேசு நமக்காக பாடுகள் பல பட்டு தமது உதிரத்தையே சிந்தி, சிலுவையில் தொங்கிய நாளைத்தான் நாம் தவக்காலமாக அனுசரித்து வருகிறோம்.

இன்றைய தவக்காலத்தில் அன்னையின் வியாகுலங்களையும் தியானித்து, அவர் பிறருக்கு செய்த உதவிகளையும் நாம் நினைத்துப் பார்ப்போம். குறிப்பாக கானாவூர் திருமணத்தில் பற்றாக்குறையான திராட்சை ரசம் தீர்ந்தபோது, தானாகவே முன்வந்து அன்னை மரியா அந்த குடும்பத்திற்கு உதவிக்கரம் நீட்டுவதை நாம் பார்க்கிறோம். எனவே, தேவையில் இருக்கக்கூடிய மக்களுக்கு நான் உதவி செய்வேன் என்று அவர்கள் எதிர்பார்ப்பதற்கு முன்னதாக தன் மகன் வழியாக மிகப்பெரிய அற்புதத்தை செய்வதை நாம் கண்டிருக்கிறோம்.

அதே அன்னை மரியா எலிசபெத்தம்மாள் உதவிக்காக ஏங்கிக் கொண்டிருக்கையில், மலை நாட்டுக்கு ஏறக்குறைய 300 கிலோ மீட்டர் நடந்தே சென்று அவர்களைச் சந்தித்து, ஆறுதல் கூறுவதுடன், அவர்களுடனே இருந்து உதவி செய்ததாக விவிலியம் கூறுகின்றது. அதுதான் அன்னை மரியா பிறருக்கு உதவிக்கரம் நீட்டக்கூடிய செயல்பாடாக இருக்கின்றது.

நமது ஆண்டவர் இயேசு உயிர்த்து மண்ணுலகில் இருந்து, விண்ணுலகுக்கு செல்கின்றபோது, அவருடன் கூடவே இருந்த அப்போஸ்தலர்கள் எங்கு செல்வோம்.... என்று திக்குத் தெரியாமல் நின்றிருந்தபோது, அவர்கள் அனைவரையும் அரவணைத்து ஒன்றுகூட்டி, “நான் உங்களுக்குத் துணை நிற்கிறேன். நீங்கள் கலங்க வேண்டாம். நீங்கள் என்னுடைய பிள்ளைகளாக இருக்கின்றீர்கள்” எனச் சொல்லி, அவர்களை ஒருங்கிணைத்து, தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள அன்னை மரியா உதவிக்கரம் நீட்டுவதைப் பார்க்கிறோம்.

அந்த அன்னைதான் தேவையில் இருக்கக் கூடிய ஒவ்வொருவரையும் தானாக தேடிச் சென்று உதவி செய்யக்கூடிய தாயாகவும் இருக்கின்றார்கள். நமது பாதுகாவலியாம் பனிமயத் தாயின் அரவணைப்பில் வாழும் நாம் பிறருடைய தேவையில் எவ்வாறு உதவி செய்கிறோம்...? நமது நண்பர்களை, நமது அயலாரை, நமது உறவினர்களை, பசியால் வாடுபவர்களை எவ்வாறு தேடிச் சென்று கரம் பிடித்து தூக்கி விடுகின்றோம்...?

ஒரு அழகான பாடலை நாம் கேட்டதுண்டு. அதில் “ஒவ்வொரு மனிதனும் என் நண்பன். ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன்” எனத் தொடங்கும் பாடலில்... “வறுமையில் வாழ்பவன் என் நண்பன். வருத்தத்தில் இருப்பவன் சகோதரன், அல்லல் படுகிறவன் என் நண்பன். ஆபத்தில் இருப்பவன் சகோதரன். காரணம் அவனும் மனிதன்” என அழகான வரிகளைக் கொண்ட பாடல்.

நமது ஆண்டவர் இயேசு விவிலியத்தில் அடிக்கடி சொல்வது.... “யார் ஒருவன் துன்பப் படுகிறானோ, அவனுக்கு நீங்கள் மனமுவந்து உதவி செய்யுங்கள். நல்ல சமாரியன் உவமையில், கண்டுகொள்ளாமல் போன லேவியர், குருக்களைத் தவிர யார் ஒருவன் உதவிகள் செய்தானோ அவனே பேறுபெற்றவனாக கருதப்படுகிறான். இன்றைய காலகட்டத்தில் பல இடங்களில் நாம் பிறரைக் கண்டுகொள்ளாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பிறரன்பு

என்பது அதுவல்ல, மாறாக தேவையில் இருப்பவருக்கு உதவிகள் செய்தால், அவர் ஆண்டவர் முன்னிலையில் பேறுபெற்றவராக மாறமுடியும் என்ற சிந்தனையை அன்னை மரியா நமக்கு உணர்த்துகின்றார்.

நமது அன்றாட வாழ்க்கையில் ஒரு சிலருக்கு வாக்குறுதி கொடுத்திருப்போம். இந்த தேதியில், இந்த நேரத்தில் உனக்கு உதவி செய்கிறேன் என்று.... ஆனால் நமது பொருளாதாரச் சூழ்நிலை மற்றும் வேலைப்பாடு காரணமாக அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதியையே மறந்து, நாம் சொன்னதைக் காப்பாற்ற முடியாமலும், உதவியில் இருப்பவர்களை, ஏமாற்றும் விதமாகவும் நடந்திருப்போம். நாம் தினமும் நடந்து செல்கின்ற சாலைகளில் பசியால் நம்மிடம் தர்மம் சிலர் கேட்கின்றபோது நாம் கண்டும் காணாதது போல, இரக்கமற்ற மனிதர்களாக அவர்களைக் கடந்து சென்றிருப்போம். இது முற்றிலும் தவறானது என நீதிமொழிகள் புத்தகத்தில் ஆசிரியர் கூறுவார்.

“ஏழை கூக்குரலிடும்போது எவன் காதைப் பொத்திக்கொள்கிறானோ, அவன் தானே உதவிக்காக மன்றாடும்போது எவரும் அவனுக்குச் செவிகொடுக்க மாட்டார்” (நீதிமொழிகள் 21:13).

தவக்காலத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் நம்மில் பலர் இன்னும் மனிதாபிமானத்துடன் அன்னை மரியாவைப் போல் உதவிக்கரம் நீட்டக் கூடியவர்களாகத்தான் இருக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சியே. நமது திருவிவிலியத்தின் மையப் பகுதியில் மத்தேயு நற்செய்தியாளர் மிகவும் அழகாக கூறுவார்.

“பிறர் உங்களுக்கு செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள். இறைவாக்குகளும், திருச்சட்டமும் கூறுவது இதுவே (மத்தேயு 7:12).

நாம் மற்றவர்களிடம் எதையாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என விரும்புகிறோமே தவிர, நாம் பிறருக்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்ய மறுக்கிறோம்.

“ஏழைகளுக்குக் கொடுப்பவருக்குக் குறைவு எதுவும் ஏற்படாது. அவர்களை கண்டும், காணாததுபோல இருப்பவர் பல சாபங்களுக்கு ஆளாவர்” (நீதிமொழிகள் 28:27).

ஆகையால், தவக்காலத்தில் வாழ்கின்ற நாம், அன்னை மரியா துன்பப் படுகின்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியதுபோல நாமும் நம்மால் முடிந்த உதவிகளை நமது பனிமய அன்னையை முன்னிறுத்தி, இறைமகன் இயேசு காட்டிய வழியில் உதவிகள் செய்து, இந்தத் தவக்காலத்தை அன்பின் காலமாக, கருணையின் காலமாக, இரக்கத்தின் காலமாக மாற்றுவோம்.

ஜெபம், தவம், தானதர்மம் வழியாக கிறிஸ்துவுக்குள் ஒரு புதுப்படைப்பாக மாற திருஅவை அளிக்கும் காலம்தான் இத்தவக்காலம். இயேசு தன்னையே தாழ்த்தி, இறைவனிடம் ஒப்புக்கொடுக்க ஜெபமும், தன்னையே முழுமையாய் வெற்றிகொள்ள நாற்பது நாள் நோன்பும், மனிதர்களை பாவத்திலிருந்து மீட்க, சிலுவையின் வழியில் தன் உயிரையும் கொடுத்தார். இம்மூன்று செயல்களே கிறிஸ்தவ வாழ்வின் மையத் தூண்கள். இவற்றில் எது இல்லை எனினும் கிறிஸ்தவ வாழ்வு முழுமை அடையாது.

ஆகையால், இறைவனிடம் நம்மையே தாழ்த்தி, ஒப்புக்கொடுத்து, ஜெபம் என்ற ஆயுதத்தால் நெருக்கடிகளைக் கடந்து சென்று, நோன்பு என்ற ஆயுதம் கொண்டு, உடல் இச்சைகளை வென்று, தானதர்மம் வழியாக இயேசுவின் அன்பைப் பகிர்ந்து கொண்டு வாழ இந்த தவக்காலத்தில் நம்மையே தயாரிப்போம்.



**அண்டோ மோத்தா**

# ஒளிரட்டும் வாழ்வு

யோவான் 8:12 - “உலகின் ஒளி நானே, என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார், வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்.”

“என்ன ஒரு அருமையான வசனம்! இயேசுவின் பாடுகளைத் தியானித்துக் கொண்டு உயிர்ப்புப் பெருவிழாவை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ மக்கள் ஒவ்வொருவருக்கும் இந்த வசனம் ஒரு பெரிய நம்பிக்கையைத் தரக்கூடிய ஒன்றாகும்.

இந்த வசனம் தரும் விளக்கத்தை என் வாழ்வில் நடந்த ஒரு சிறு நிகழ்வு மூலம் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடந்த பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் நான், என் கணவர், என் மகள் மூன்று பேரும் காரில் பாளையங்கோட்டையில் உள்ள எங்கள் உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தோம். அன்றே வீட்டிற்குத் திரும்பி வரவேண்டிய சூழல்.

எனவே. நாங்கள் பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடிக்கு 45 நிமிடத்தில் வந்துவிடலாம் என்பதால், இரவு 9.30 மணிக்கு அங்கிருந்துக் கிளம்பிவிட வேண்டும் என்று தீர்மானித்தோம். ஆனால், எதிர்பார்த்ததைவிட எங்கள் வேலை முடிய இரவு 11.30 மணி ஆகிவிட்டது. எனினும், கிளம்பிவிட்டோம்.

வரும் வழியில் மனதுக்குச் சிறிது கலக்கமாகவும், சற்றுப் பதற்றமாகவும் இருந்தது. இறைவனிடமும், பனிமயத் தாயிடமும் வேண்டிக்கொண்டு எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். வரும் வழியில் எங்கள் காரின் முகப்பு விளக்கு ஒளியானது ஊர்ப் பெயர் எழுதப்பட்ட பெயர்ப் பலகையில் விழுந்தது. அந்த ஒளிகொடுத்த அந்த ஊர்ப் பெயர் எங்களுக்கு இன்னும் சற்று தூரம்தான் என்ற நம்பிக்கையையும் ஒருவித உத்வேகத்தையும் கொடுத்தது. அடுத்தடுத்து அந்த ஒளி டோல்கேட், புதுக்கோட்டை, தூத்துக்குடி என்று ஒளிர்ந்தது, எங்கள் மனதை இதமாக்கி அந்த இரவுப் பொழுதை இனிதே கடக்கச் செய்தது.

அன்பார்ந்தவர்களே! இது ஒரு சிறு நிகழ்வுதான் என்றாலும், நமக்குக் கொடுக்கும் படிப்பினை பெரிது. நாம் வாழும் வாழ்க்கை என்ற பயணத்திலும், பல்வேறு துன்ப நிகழ்வுகளை எதிர்கொள்கிறோம். அவ்வேளையிலே, நம் வாழ்வு இருள் நிறைந்ததாக உணர்கிறோம். அந்த சூழ்நிலையில் இறைவனை, நம் இருளை நீக்கும் ஒளியாகக் கொண்டு அவர் நமக்குக் கற்பித்தப் போதனைகளையும், உவமைகளையும் கடைப்பிடித்து “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவான் 2:5) என்று அன்னை மரியா சொன்னதுபோல், வாழ்ந்து வந்தால், இருளில் நடவாமல் நம்பிக்கையோடு எந்த ஒரு பிரச்சனையையும் எதிர்கொள்ளும் சக்தியையும், அதிலிருந்து மீண்டு வரக்கூடிய தைரியத்தையும் இறைவன் நமக்கு அருள்வார்.

மேலும், யோவான் 14:6 வசனம் வழியாக இறைவன் நம்மிடம் “நானே வழியும், உண்மையும், வாழ்வும்” என்று கூறுகிறார். அன்பார்ந்தவர்களே! நம் வாழ்வில் மேற்குறிப்பிட்ட இரண்டு வசனங்களையும் ஆணித்தரமாகக் கொண்டு வாழ்ந்து வந்தால், உயிர்ப்புப் பெருநாளில் நம் வாழ்வும் ஒளிபெறும்.

“ஒளிரட்டும் வாழ்வு, மலரட்டும் மகிழ்வுடன்.”



ம. பனிமயசுகந்தி





# பனிமய சாட்சியம்

**117**

## திருமதி. பெனடிக்டா பீரிஸ், கோயம்புத்தூர்

எனது மகள் டினா கற்றார்க்கு நுரையீரலைச் சுற்றி சளிக்கட்டி நிமோனியா நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருந்தாள். மருத்துவர் கேன்சராக இருக்கலாம் என்று சந்தேகப்பட்டு சி.டி. ஸ்கேன் எடுத்துப் பார்க்கச் சொன்னார்கள். பனிமயத் தாயிடம் வேண்டுதல் செய்தோம். சி.டி. ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில் அப்படிப்பட்ட எந்த அறிகுறியும் இல்லை என்று கூறினார்கள். தற்சமயம் இருமல், சளி தொல்லைகளில் இருந்தும் சுகம் பெற்று வருகிறாள். பனிமயத் தாயின் கிருபைக்காக கோடானகோடி நன்றி. தொடர்ந்து பூரண குணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த சாட்சியைப் பகிர்ந்துகொள்கின்றேன்.

**118**

## மாதாவின் மகள்

என் மகளுக்கு கால் குணமாகி நல்லபடியாக நடக்கச் செய்தததற்காக பனிமயத் தாய்க்கு கோடான கோடி நன்றி. மேலும் என் மகளின் திருமணத்தை கானாவூர் திருமணத்தைப் போன்று நன்முறையில் நடத்தித் தந்த கிருபைக்காகவும் பனிமயத் தாய்க்கு இந்த சாட்சியின் மூலம் நன்றியைச் செலுத்துகின்றேன்.

**119**

## மார்க்ரெட் கல்பனா, கோயம்புத்தூர்

பனிமயத் தாயே வாழ்க! எனது மகன் மற்றும் மருமகளுக்குத் திருமணமாகி ஆறு ஆண்டுகள் குழந்தை பாக்கியம் இன்றி இரண்டு மூன்று முறை என் மருமகளுக்கு கருத்தங்காமல் இருந்தது. உம்மிடம் வேண்டி 'மிகவும் இரக்கமுள்ள தாயே' ஜெபம் தினமும் ஒன்பது முறை சொன்னதன் பலனாக மகனுக்கும், மருமகளுக்கும் அழகிய பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்ததற்கு அன்னையே உமக்கு நன்றி!

**120**

## மாதாவின் மகள்

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க! என் கணவருக்கு வயது 44. திருமணத்திற்கு முன்பே வெளிநாட்டு வேலைக்காக பல முயற்சிகள் செய்தும் ஒரு பலனும் அளிக்கவில்லை. கடந்த ஒரு வருடமாக ஒவ்வொரு நாளும் அன்னையிடம் அழுது மன்றாடி வந்தேன். 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நல்ல வேலையை (ஓட்டுநர்) Europe Country-ல் கிடைக்கச் செய்த பனிமயத் தாய்க்கு கோடான கோடி நன்றி.

**121**

## மாதாவின் மகள்

எனக்கு வலது மார்பில் ரொம்ப வலியாக இருந்தது. இது எனக்கு 4 வருடமாக இருந்தது. ஆறு மாதத்திற்கு முன் மருத்துவரிடம் சென்றிருந்தேன். ஸ்கேன் எடுத்து பார்த்ததில் சின்ன கட்டி இருக்கிறது என்று சொன்னார்கள். 15 நாட்கள் மாத்திரை எடுக்க வேண்டுமென்றும், வலி இருந்தால் மீண்டும் காண்பிக்க வாருங்கள் என்றும் சொன்னார்கள். எனக்கு மீண்டும் வலி எடுத்தது. நான் ஒவ்வொரு நாளும் அன்னையைத் தேடி வந்து ஜெபித்து விட்டுச் சென்றேன். பிறகு இடது மார்பிலும் வலிக்க ஆரம்பித்தது. நான் ஜெபமாலை ஒப்புக்கொடுத்து அழுது மன்றாடினேன். இப்போது எனக்கு எந்த வலியும் இல்லை. சுகத்தைத் தந்த பனிமயத் தாய்க்கு கோடான கோடி நன்றி! மரியே வாழ்க!

# விவிலியப் போட்டி 120

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**தோபித்து (அதிகாரம் 1 முதல் 6 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

## I. ஓரிரு வார்த்தைகளில் விடையளி:

1. மீனின் எந்த பாகங்கள் மருந்தாக பயன்படும் என்று வானதூதர் கூறினார்?
2. தோபித்து யாருடைய மகன்?
3. எது செய்யும் போது முகம் கோணக் கூடாது?
4. தோபித்து எத்தனை ஆண்டுகள் பார்வையற்றவராக இருந்தார்?
5. கடவுளின் தூதர் பெயர் என்ன?
6. எது பஞ்சத்திற்கு காரணம்?
7. யார் இருவருடைய மன்றாட்டு கடவுளின் திருமுன் கேட்கப்பட்டது?
8. எதை உதறித் தள்ளக் கூடாது?
9. தோபித்து மனைவியின் பெயர் என்ன?
10. தோபித்து நூலில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

## விவிலியப் போட்டி 119

### மார்ச் 2025

**விடைக்குறிப்புகள்**

**1யோவான், 2யோவான் 3யோவான்**

**I. கோடிட்ட இடம் :**

| | | |
|---|---|---|
| 1. | சிலை வழிபாட்டை | 1யோவான் 5:21 |
| 2. | இளைஞர்களே | 1யோவான் 2:14 |
| 3. | நம்பிக்கை | 1யோவான் 5:4 |
| 4. | கடவுளிடமிருந்து | 3யோவான் 1:11 |
| 5. | சட்டத்தை | 1யோவான் 3:4 |
| 6. | ஒளியாய் | 1யோவான் 1:5 |
| 7. | திருச்சபைக்கு | 2யோவான் முன்னுரை |
| 8. | பாவம் | 1யோவான் 5:17 |
| 9. | மனச்சான்றை | 1யோவான் 3:20 |
| 10. | நிலைத்திருப்பார் | 1யோவான் 2:17 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.04.2025**

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம்.



**63796 41209** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 214**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 125**

**விடை எழுதிய அன்பியங்கள் : 27**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. திவ்ய பாலன் அன்பியம் **ஜோதிஸ்வரி**
2. பாத்திமா மாதா அன்பியம் **பிச்சம்மாள்**
3. இரக்கத்தின் மாதா அன்பியம் **சித்ரா மோத்தா**
4. ஜெபமாலை மாதாஅன்பியம் **சகாயம்மாள் பெனடிக்ட்**

## பாராட்டுக்குரியவர்கள் : 121

**அந்தோனியார் அன்பியம்**
5. ரீனா மொறாயிஸ்
6. சரோஜா
7. ஜெயா
8. லூர்க்காஸ் சகாயம்
9. சுஜிதா
10. பிருந்தா

**அன்னை தெரசா**
11. செல்வராணி
12. ரெய்ஸா சுஜய்
13. ஜான்சி ராணி
14. சுகன் மோனிஷா
15. சுரேஷ் பிரேமா
16. பெற்றி சூசையா
17. ஜோ ரொவினா
18. அந்தோணிசாமி சந்தியாகு சாந்தி

**அன்னை வேளாங்கன்னி**
19. நான்சி
20. கவாஷினி ஆல்வின்
21. டென்சி
22. மிஷல் மிரல்

**கிறிஸ்தரசர்**
23. லூரட் வசந்த்
24. செலஸ்கி கிளமென்ட்
25. ரெக்ஸ் கிரீன்வெல்
26. ஜூலியட் சாவியோ

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
27. ராஜா ஜரின்

**திவ்ய பாலன் அன்பியம்**
28. பிரின்சி
29. சகாயராணி தன்ராஜ்
30. ஸ்டார்லக் ஏஞ்சலின்
31. சென்சிலா சகாயராஜ்

**பாத்திமா மாதா**
32. ரீனா ராஜா
33. அனு ஆல்வின்
34. ஸ்டெபி ரீகன்
35. சுகந்தா ஸ்டெனி
36. யாமினி புருனோ

**இரக்கத்தின் மாதா**
37. பாப்டிஸ்டா
38. இருதயம்மாள் கொன்சால்
39. சகாயராணி
40. சேவியர் அம்மாள் கோமஸ்
41. செல்விபுரோ
42. பிரைட்டன் ஜெரோபின்

**ஜெபமாலை மாதா**
43. கல்யாணி செல்வராஜ்
44. ஸ்நோ அட்ரீணா

**ஜூடு அன்பியம்**
45. டிரைபேனா
46. டெரன்சியா அரிஸ்டோ
47. சேலிமா வினோத்

**காவல் தூதர்**
48. சாந்தி ஆல்ட்ரின்
49. ஜோ ட்ரினிஷா
50. சார்லட் பிராங்
51. பிரிசில்லா
52. ஜெஸிமா கிளாரன்ஸ்
53. ரஜூலா அலாய்
54. வெனிட்டாள்
55. ரஸ்கின் வசந்தா
56. ஜூலியஸ் டல்மேடா
57. எலிஜா இம்மானுவேல்
58. அல்பின்

**குழந்தை தெரசா**
59. பெனி மொறாயிஸ்
60. பெர்லி டென்சன்
61. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
62. எமல்டா
63. பிரான்சிஸ் வாஸ்
64. மோனிகா செபஸ்டின்

**மணல் மாதா**
65. ரொசாரி கோமஸ்
66. வெர்ஜினியா

**லூர்து மாதா**
67. சாண்டினா
68. ஆலிவர் வி. ராயன்
69. ஜெனோசேவியர்
70. ரஜூலா ஜான்போஸ்கோ
71. ரோஸ்லின் தாமஸ்
72. பிலோ கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**
73. ஜோஸ்பின்
74. வினோ அந்தோணி
75. ஸ்நோ ஆல்பிரி;க்

**பனிமய அன்பியம்**
76. சுரேஷ் ஆனி
77. மெர்சி;
78. ஜாக்குலின் வினோதினி
79. ராணி
80. ஜூடுரதி
81. சகாயராஜா சகாயராணி
82. அந்தோணிசாமி

**பவுலடியார்**
83. லீமாரோஸ் ஜாய்
84. ராஜா ரோஸ்லின்
85. ஒபிலியா தாமஸ்
86. ஹெலினா

**பரிபூரண மாதா**
87. சப்னா கினிஸ்டன்
88. மெடோனா

**பொம்பெயி மாதா**
89. இம்மாக்குலேட் சதீஷ்
90. மேத்யூ கர்டோசா
91. டிஃபானி அண்டோ
92. லூடா கான்ஸ்டன்
93. அண்டோ எல்ஃபி
94. தெரேசா பிரகாஷ்
95. லெரின்ஸ் ரொட்ரிகோ
96. ஜான்சிராணி அமல்ராஜ்

**இராயப்பர்**
97. ரெனோ போஸ்கோ
98. நேவிசம்மாள்
99. டெய்ஸி
100. ரொமில்டா

**சவேரியார்**
101. ஜான்சி ஜெயக்குமார்
102. ரூபா மனுவேல்
103. வினிஸ்டா ஷெரின்
104. அன்டன் சகாயம்
105. அனுஷியா பீட்டர்
106. டெலிலா அமலன்

**செபஸ்தியார்**
107. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
108. பிரவீனா
109. ரேவதி ரஜூல்டன்
110. ஜெசிலா சேவியர்
111. அந்தோனியம்மாள் டென்சிங்
112. பிரின்சி லியோ

**சிந்தாத்திரை மாதா**
113. நேசம்
114. ஜூடி ஆரோக்கியராஜ்
115. டோனஸ் ராயன்

**சிறுமலர் அன்பியம்**
116. விஜி சகாயராஜ்
117. எல்சிட்டா ஆனந்தன்
118. செலஸ்டின்

**சூசையப்பர்**
119. கிறிஸ் ரீஜோ
120. ஹேமலதா
121. மோனிஷா காஸ்பின்
122. ஜெனி
123. ஜாக்குலின்
124. விஜயன்

**திருச்சிலுவை**
125. ஜஸ்டின் ஸ்நோகுளோரி

**வியாகுலமாதா**
----

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 89

**பரிசு பெறுபவர்கள் : 4**

126. மதுரை — **ஜெஸிந்தா மேரி**
127. கொடைக்கானல் — **ஜெஸிந்தா மார்ட்டின்**
128. காந்தி நகர் — **ரியாலினோ**
129. அந்தோணியார் கோவில் — **வயோலா ஜான்சன்**

## பாராட்டுக்குரியவர்கள் : 85

**சென்னை**
130. கமலஜோதி ஜெயசீலன்
131. ரெஜினா கிரகோரி
132. பிரேமா குணசீலன்
133. கில்பர்ட் உமா
134. கன்ஷியஸ் விஷால்
135. மார்க்ரெட் மேரி
136. டெனிசா கிளாட்

**கோயம்புத்தூர்**
137. சத்யாசேவியர்

**திருச்சி**
138. மோனிட்டா கிறிஸ்டி
139. மேத்யூ விவேக்
140. பிலவேந்திரம்
141. ஜான்சி ராணி

**மதுரை**
142. சகோ. ஜான்சிமேரி

**பல்லடம்**
143. பிரான்சிஸ் ஆர்லன்

**திருநெல்வேலி**
144. மைக்கேல் அம்மாள்

**பேட்டை**
145. ஹெலனிட்டா

**ஆறுமுகநேரி**
146. ஜெயராணி
147. தொம்மை அந்தோணி
148. கெர்மன்

**வீரபாண்டியன் பட்டணம்**
149. மிசியா

**ஆலந்தலை**
150. தங்கராஜ் பொன்சேகா
151. சகாயராணி

**உவரி**
152. அர்லின் ஈவ்லின்

**புன்னைக்காயல்**
153. சகோ. லோரா மேரி

**ஏரல்**
154. ஜாய்ஸ் ரெத்னம்

**உடன்குடி**
155. ஸ்நோவின்

**பெரியகுளம்**
156. குழந்தை தெரஸ்

**கயத்தாறு**
157. அமல்ராஜ்

**தருவைக்குளம்**
158. லில்லி சோபியா நிக்கோலஸ்

**தேனி**
159. ரொசாரியோ ஈவ்லின்

**வடக்குத்து (கடலூர்)**
160. ஹென்றிதாஸ்

**சிவகாசி**
161. ஜெர்லின்

**புதியம்புத்தூர்**
162. ஹெலன் அன்னமனி

**பரமக்குடி**
163. சைமன் சாந்தி

**தாராபுரம்**
164. இம்மானுவேல்

**<u>தூத்துக்குடி நகர பங்குகள்</u>**

**திரு இதயங்களின் பேராலயம்**
165. பீட்டர் ஜெயந்தி
166. ரமோலா கமிலஸ்
167. மேரி கிரேட்டா ராஜா

**குருஸ்புரம்**
168. பௌவுசி ஜோ மைக்கேல்
169. சபிதா ரெஸிங்டன்
170. பிளாசி செல்வராஜ்
171. ஜான்சி மென்டிஸ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
172. சுகிர்தா
173. ஷெரினா
174. டோமினிக்
175. சகாயம்
176. மோட்ச ராணி
177. டார்லிமா அமுதன்
178. நேவிசம்மாள்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
179. லிஜியா
180. செக்கரியா சாமுவேல்

**யூதா ததேயு கோவில்**
181. சகாயமேரி
182. ஆரோக்கிய சர்மிளா
183. இம்மானுவேல் சேகர்
184. ஜூடி ரீத்தம்மாள் மேரி
185. ரோஸ் சேவியர்
186. லூர்து சுவிதா
187. ஜெனட் சேவியர்
188. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
189. ஷிர்லி
190. பாக்கியசீலி ஹெப்சி
191. பிரான்சிஸ் ஜூலியட்
192. ஸ்டெல்லா ஜோசப் கென்னடி

**அந்தோணியார் கோவில்**
193. மென்சிலா லொயோலா
194. ரீடன்
195. இருதயம்மாள் கபிரியேல்
196. மகேஷ் சுஜாதா
197. டயானா வினோத்

**காந்தி நகர்**
198. பின்டன் சோஃபியா
199. ரமேஷ் நர்மதா
200. கிளமென்சியா மேக்டன்
201. சாந்தினி
202. சரோ ராஜ்

**பாத்திமா நகர்**
203. மேரி ஹேம்லின்
204. ஷர்மிளா ரமேஷ்

**சார்லஸ் கோவில்**
205. அல்போன்சா
206. சகாயிற்றா மச்சாது

அண்ணா நகர்
207. ஹெலன் ஜான் கென்னடி
208. வென்சி ராணி

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
209. அலெக்ஸ் ஜோ ஆனந்த்
210. பாத்திமா ஏஞ்சலின்
211. சகோ. சூசை ரூபி
212. சூசை நெவின்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
213. வெர்ஜின்
214. தயாபரராணி

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 209**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 214**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 10)

## ஏப்ரல் - 2025

| | |
|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : அருள்பணி. ஸ்டார்வின் |
| உதவிப் பங்குத் தந்தை | : அருள்பணி. பாலன் |
| களப் பணியாளர் | : சகோதரர் தினகரன் |
| பங்கு அலுவலகம் | : 0461 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | ஞாயிற்றுக் கிழமைகளில் |
|---|---|---|
| காலை 5.30, 6.30<br>மாலை 5.30 | காலை 5.30, 6.30 திருப்பலி<br>காலை 11.00 செபமாலை, **நவநாள் திருப்பலி**<br>மாலை 5.30 திருப்பலி<br>மாலை 6.30 செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | காலை **5.00, 6.30, 8.00** திருப்பலி<br>காலை **9.30** ஆங்கிலத் திருப்பலி<br>மாலை **5.30** திருப்பலி<br>மாலை **6.30** செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

*மற்ற நாட்களில் எந்நேரமும் பங்குத் தந்தையரை அணுகலாம்.*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*

- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*
- ✓ *உறுதிபூசுதல் அருள்சாதனம் :* ***11.05.2025*** ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணி

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*
  *மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

1. தவக்காலம் 05.03.2025 சாம்பல் புதன் அன்று தொடங்கியது. அன்று மூன்று திருப்பலிகளிலும் சாம்பல் பூசப்பட்டது.
2. தவக்காலத்தின் முதல் ஞாயிறாகிய 09.03.2025 அன்று மாலை 04.30 மணிக்குப் பேராலய வளாகத்தில் சிறப்பு சிலுவைப் பாதையும் தொடர்ந்து நற்கருணை ஆசீரும் நடைபெற்றன.
3. 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞாயிறு மறைக்கல்வி குழந்தைகளுக்காக சிறப்புத் திருப்பலி பேராலய வளாகத்திலுள்ள அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது.
4. தவக்காலத்தின் செவ்வாய்க்கிழமைகளில் திருச்சிலுவை சிற்றாலயத்தில் பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை "தலையான பாவங்கள்" என்னும் தலைப்பில் தவக்கால உரைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து குணமளிக்கும் ஆராதனையும், திருப்பலியும் நடைபெற்றன.
5. தவக்காலத்தை முன்னிட்டு பேராலயத்தை சிறப்பான முறையில் சுத்தம் செய்த நமது ஸ்நோஸ் யூத் இளைஞர்கள், ஆலய ஊழியர்கள் மற்றும் தினமும் ஆலயத்தைப் பெருக்கி சுத்தம் செய்பவர்களை பங்குத்தந்தை பாராட்டினார்கள்.
6. 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 02.00 மணிக்கு இரண்டு பேருந்துகளில் தவக்காலத் திருப்பயணமாகப் பங்கு மக்கள் வாடிப்பட்டி, கொடைக்கானல் மற்றும் கவிராயபுரம் திருத்தலங்களுக்கு சென்று வந்தனர்.
7. 17.03.2025 திங்கட்கிழமை பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையின் நிதிக்குழுக் கூட்டம் மாலை 05.00 மணிக்கும், செயற்குழுக் கூட்டம் மாலை 05.30 மணிக்கும் நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றன.
8. 20.03.2025 வியாழக்கிழமை மற்றும் 25.03.2025 செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் பொதுக்குழுக் கூட்டம் மாலை 07.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றன. பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.
9. 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞாயிறு மறைக்கல்வி குழந்தைகளுக்கு சிறப்பு சிலுவைப் பாதை நடைபெற்றது.
10. 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை மறைக்கல்வி குழந்தைகளுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டன.
11. பேராலயத்தின் மண்டபத்தில் அமர்ந்திருப்பவர்களும் திருப்பலியின்போது எழுந்தேற்றம் காணும் விதமாக நான்கு டி.வி.களிலும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது.
12. புனித சவேரியார் மண்டபத்தில் இரு பக்கங்களிலும் இறைமக்கள் மற்றும் துறவிகள் வசதியாய் அமர தளங்கள் போடப்பட்டுள்ளன.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வாழ்த்துகின்றோம்*

### I. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 37. | ஜேசு ஜெயராஜ் ஜேரிஸ் | ஜூலியான்ஸ் - சுகந்தி | 01.03.2025 | சிறுமலர் |
| 38. | ஜேனிசியா | ஜூலியான்ஸ் - சுகந்தி | 01.03.2025 | சிறுமலர் |
| 39. | ஹேனா வெரோன்ஷா | சதீஷ் - பிரிசில்லா | 01.03.2025 | அன்னை தெரசா |
| 40. | ரோஸ்லின் லோபோ | அமுதன் லோபோ - வினான்சி | 01.03.2025 | மணல் மாதா |

### செபிக்கின்றோம்

## 2. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 38. | விமல்டா | பீட்டர் | 01.03.2025 | இராயப்பர் |

## நடைபெறவிருப்பவை

- ★ 04.04.2025 தலைவெள்ளிக்கிழமை அன்று காலையும், மாலையும் நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 05.04.2025 மாதத்தின் முதல் சனியன்று மாலைத் திருப்பலியும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 06.04.2025 மாலையில் 04.30 மணிக்கு ஆயர் தலைமையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும். தவப் பவனி நமது பேராலயத்தில் தொடங்கி, திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் நிறைவுபெறும்.
- ★ 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 12.00 மணி முதல் மாலை 03.00 மணிவரை அருள்பணி. இசிதோர் அவர்களால் நமது பேராலயத்தில் **நோன்பு குறுந்தியானம்** நடத்தப்படும்.
- ★ ஏப்ரல் 17,18,19 (பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி) புனித வாரத் திருநிகழ்வுகள் புனித சவேரியார் மண்டபத்தில் நடைபெறும்.
- ★ 21.04.2025 உயிர்ப்புத் திங்கள் அன்றுமாலை 05.30 மணிக்கு பங்கின் அனைத்து இல்லங்களும் பாஸ்கா புனித நீரால் புனிதப்படுத்தப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.
- ❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| 38. | 01.04.2025 | தலையான பாவம் 4:கோபம் |
| | 08.04.2025 | -------------------- |
| | 15.04.2025 | பெரியவாரம் |
| 39. | 22.04.2025 | உயிர்ப்பின் வாழ்வு வாழ்வோம் |
| 40. | 29.04.2025 | சாட்சிய வாழ்வு வாழ்வோம் |



# பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்



### தூத்துக்குடி

## புனித வாரத் திருநிகழ்வுகள் – 2025

### 13.04.2025 - திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

| | |
|---|---|
| *காலை 05.00* | முதல் திருப்பலி |
| *காலை 06.15* | தூய சவேரியார் மண்டபத்தில் குருத்தோலை மந்திரிப்பு, பவனி, பேராலயத்தில் திருப்பலி |
| *காலை 08.15* | மூன்றாம் திருப்பலி |
| *காலை 09.30* | நான்காம் திருப்பலி (ஆங்கிலம்) |
| *காலை 12.00 முதல் 03.00 வரை* | பேராலயத்தில் நோன்பு குறுந்தியானம் : **அருள்பணி. இசிதோர்** |
| *மாலை 05.30* | மாலைத் திருப்பலி |
| *மாலை 06.30* | நற்கருணை ஆசீர் |



### 14.04.2025 - புனித வாரத் திங்கள்

| | |
|---|---|
| *காலை 05.30, 06.30* | காலைத் திருப்பலிகள் |
| *மாலை 05.30* | மாலைத் திருப்பலி – தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு |

### 15.04.2025 - புனித வார செவ்வாய் - திருஎண்ணெய் அர்ச்சிப்புத் திருப்பலி

| | |
|---|---|
| *காலை 05.30, 06.30* | காலைத் திருப்பலிகள் |
| *மாலை 05.30* | **மாலைத் திருப்பலி நடைபெறாது.** திரு இதயங்களின் பேராலய வளாகத்தில் **மேதகு ஆயர்** தலைமையில் திரு எண்ணெய் அர்ச்சிப்புத் திருப்பலி நடைபெறும். |

### 16.04.2025 - புனித வார புதன்

| | |
|---|---|
| *காலை 05.30, 06.30* | காலைத் திருப்பலிகள் |
| *மாலை 05.30* | மாலைத் திருப்பலி – தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதன வழிபாடு |

### 17.04.2025 - புனித வியாழன் - ஆண்டவரின் இராவுணவு

| | |
|---|---|
| *மாலை 06.00* | பேராலய வளாகத்தில் திருப்பலி, பாதம் கழுவும் சடங்கு. திருப்பலி முடிவில் நற்கருணை இடமாற்றுப் பவனி நடைபெறும். தொடர்ந்து பேராலயத்தில் நற்கருணை ஆராதனை நடைபெறும். |
| *இரவு 08.00 - 08.30* | சவேரியார், பவுலடியார் மண்டல அன்பியங்கள் |
| *இரவு 08.30 - 09.00* | அந்தோனியார், மணல் மாதா மண்டல அன்பியங்கள் |
| *இரவு 09.00 - 09.30* | பாத்திமா மாதா, அன்னை தெரசா மண்டல அன்பியங்கள் |
| *இரவு 09.30 - 10.00* | சூசையப்பர், இராயப்பர் மண்டல அன்பியங்கள் |



***இரவு 10.00 - 10.30*** செபஸ்தியார் மண்டல அன்பியங்கள்

***இரவு 10.30 - 11.00*** கிறிஸ்து அரசர் மண்டல அன்பியங்கள்

***இரவு 11.00 - 12.00*** பொது ஆராதனை

***இரவு 12.00*** நகர வீதிகளில் **பெரிய சிலுவைப் பாதை** பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரால் நடத்தப்படும்.

## 18.04.2025 - புனித வெள்ளி - ஆண்டவரின் திருப்பாடுகள்



***காலை 05.00 முதல் மாலை 03.00 வரை*** அமைதியில் நற்கருணை ஆராதனை.
தனியாகவும், குடும்பமாகவும் ஆராதனை செய்யலாம்.

இன்று **உண்ணா நோன்பு** (ஒருசந்தி), **புலால் நோன்பு** (சுத்தபோசனம்), **ஊடக நோன்பு** (தொலைக்காட்சி, இணையதளம், திறன்பேசி தவிர்ப்பு) கடைப்பிடிப்போம்.

***காலை 11.30*** பேராலயத்தை சுற்றி சிலுவைப் பாதை.

***மாலை 6.00*** திருப்பாடுகளின் வழிபாடு

திருச்சிலுவை ஆராதனையின்போது பசி, பிணி ஒழிப்புக்காக, அறப்பணிக்காக தாராளமாக காணிக்கை செலுத்துங்கள்.

வழிபாட்டின் முடிவில் திருச்சிலுவை சிற்றாலயத்தில் ஆசந்தி சுரூபம் முத்தி செய்வதற்காக வைக்கப்படும்.

## 19.04.2025 - புனித சனி

இன்றைய பகல் பொழுதை அமைதியில் கழிப்போம்.

## உயிர்ப்பு பெருவிழா (திருவிழிப்பு)

***இரவு 11.00 மணி*** திருவிழிப்பு வழிபாடு: பாஸ்கா புகழுரை, இறைவார்த்தை, திருமுழுக்கு வழிபாடு, திருமுழுக்கு நீர் மந்திரித்தல்.

திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்க மெழுகுதிரி கொண்டு வாருங்கள்.

## 20.04.2025 - உயிர்ப்பு ஞாயிறு



***காலை 6.30 மணி*** முதல் திருப்பலி

***காலை 8.00 மணி*** இரண்டாம் திருப்பலி

**ஆங்கிலத் திருப்பலியும், மாலைத் திருப்பலியும் நடைபெறாது.**

***மாலை 6.30 மணி*** செபமாலை, உயிர்த்த இயேசுவின் திருவுருவப் பவனி, நற்கருணை ஆசீர்

## 21.04.2025 - உயிர்ப்பு திங்கள்

***மாலை 5.00 மணி முதல்*** அனைத்து இல்லங்களும் பாஸ்கா நீரால் புனிதப்படுத்தப்படும்.

## விண்ணக வாழ்வின்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவரின் கையில் அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசா 62:3)



மண்ணில்
11.03.1960

விண்ணில்
24.04.2024

# D. சகாயராஜா மொறால்

**வயது : 64**

*நினைவுத் திருப்பலி*

**24.04.2025 - வியாழக்கிழமை - காலை 11.00 மணி**

**திருச்சிலுவை சிற்றாலயம், தூத்துக்குடி**

*ஜெபம் : JMJ ஹால்*

*பிரிவால் வருந்தும்*

**மனைவி : S. சகாயராணி**

**மகன், மகள், மருமக்கள், பேரன்கள், பேத்தி**

**மற்றும் குடும்பத்தினர்**

# நினைவஞ்சலி

"நான் உடலோடு உங்களோடு இல்லாவிடினும்
உள்ளத்தால் உங்களோடு இருப்பேன்"
(1கொரி 5:3)

## ஏழாம் ஆண்டு



# C. விட்வின் பர்னாந்து

[ W/o. கொலம்பஸ் பர்னாந்து (Late) ]

| மண்ணக தந்தையோடு | விண்ணக தந்தையோடு |
| --- | --- |
| 13.06.1927 | 13.04.2018 |

உறவுகளோடு : 91



## 60ஆம் நாள்



# C. ஜோன்ஸ் பர்னாந்து

[ S/o. கொலம்பஸ் பர்னாந்து (Late) ]

| மண்ணக தந்தையோடு | விண்ணக தந்தையோடு |
| --- | --- |
| 16.12.1961 | 07.02.2025 |

என்றும்
உங்கள் நினைவில் வாழும்

குடும்பத்தினர்

# 5 YEARS





*God bless ma*

**SHINY** Ph : 98421 31493